

PORIYIYAL KADHIR

தனி பிரதி
ரூ.10/-




# பொறியியல் கதிர்

கதிர் 48 | பாரிப்பு 2 | திருவள்ளுவர் ஆண்டு 2046 | அக்டோபர் 2016

## அக்டோபர் திங்களில் உதித்த உத்தம
## தலைவர்களை உவந்து போற்றுவோம்





நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org    email id : tneapwd@yahoo.co.in

2016 - 2017 ஆம் ஆண்டிற்கான சென்னை கிளை
புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்



2016 - 2017 ஆம் ஆண்டிற்கான கடலூர் கிளை புதிய பொறுப்பாளர்கள்
உறுதிமொழி எடுத்தல்



**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 2 (2016 - 2017)



# தொடரும்

## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான காலி பணியிட மதிப்பீடு (Estimate of vacancy) அரசுக்கு அனுப்ப தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். முன்னாள் முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு. திருமாறன் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கு பிறகு கூடுதல் பொறுப்பு வகித்த தலைமைப் பொறியாளரும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முன்னாள் முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு. திருமாறன் அவர்கள் உச்சநீதி மன்ற தீர்ப்புக்கும், நடைமுறை விதிகளுக்கும், நியாயத்திற்கும் புறம்பாக, உள்நோக்கத்தோடு பகுதி நேர பட்டம் பயின்ற இளம் பொறியாளர்களுக்கு பதவி பெயர் மாற்றம், ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து உதவிப் பொறியாளராக பதவி பெயர் மாற்றம் வழங்கினார். இது சம்பந்தமாக அரசிடம் விளக்கம் கேட்கப் பட்டுள்ளது. விரைவில், உச்சநீதி மன்ற தீர்ப்பின் படியும், விதிகளின் படியும் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதவி பெயர் மாற்றம் செய்ய அரசு அறிவுரைகள் வழங்கும்.

பட்டயம் படித்த பணிஆய்வாளர்கள் உள்ளிட்ட 23 நபர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு ஆணை வழங்கப்பட்ட பிறகு ரத்து செய்யப்பட்டது. முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களால் அரசிடம் சில விளக்கங்கள் கேட்கப்பட்டது. தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு

அளிக்கலாம் என்று அரசு பதில் அளித்தது. கூடுதல் பொறுப்பு வகித்த தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் பணிஆய்வாளர் தவிர இரண்டு பேருக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளித்தது சரியா என்று மீண்டும் அரசிடம் விளக்கம் கேட்க போவதாக கூறினார். தமிழ்நாடு பொறியியல் சார்நிலை பணித்தொகுதி விதிகளின்படி வழங்கலாம் என்று சங்கத்தின் சார்பாக எடுத்துக் கூறினோம். ஆனால் மீண்டும் அரசிடம் விளக்கம் கேட்ட பிறகே போட முடியும் என்று கூறினார்.

பட்டயம் முடித்த பணிஆய்வாளர்களுக்கு வரைதொழில் அலுவலர் பதவி உயர்வு அளிப்பது சம்பந்தமாக முதன்மைத் தலைமைப் பொறியாளரால் அரசிடம் விளக்கம் கேட்கப்பட்டது. தற்போது அரசு கூடுதல் விபரங்கள் கேட்டு மீண்டும் கோப்பை முதன்மைத் தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியுள்ளது. தற்போது தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை விரைவில் பதில் அளிக்க வலியுறுத்தியுள்ளோம். விரைவில் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் பதில் அளிப்பார் என்று நம்புகிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**

**தேசநலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588
988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

## A tribute to RKS...

Father My Dear Father –This is how my dad's letter to his father starts. I simply follow his footsteps in portraying affection and attachment to my parents

On completion of my education and soon after marriage, I received numerous offers abroad, but his motivation to serve the country and the place we live, urged me to reject those assignments...

A feeling of oneness was instilled in me, which made me live with parents, wife and daughter together. I cherish the fond memories and feel proud for having spent 46 years with him. His extreme family bonding led his daughter also living adjacent

I would like to mention few important points about my dad:

- RKS, as he is fondly called, was an enthusiastic person. He never missed an opportunity to attend functions and bless people with the phrase "Vaazhga Valamudan". Bondage with his wife was so high that she accompanied him everywhere. He heard this world through her
- In this modern world of android phones and pop up reminders, RKS used the Indian Postal Services extensively for all communication which included birthdays, wedding anniversaries, family functions and festivals of his near and dear
- RKS had excellent rapport with staff in all public support mechanisms such as Electricity, Telephones, Corporation, Metro Water and Sewage boards etc. This rapport was well utilized not only by us, but also by our neighbors. My suggestion for moving towards online payment was ridiculed by him, stating this was a tool that made him active and helped in keeping himself abreast with the latest developments
- RKS remained Mr. Perfect, both officially and personally
- Being a staunch believer in team work, he always attached himself to TamilNadu Engineering Association (TNEA). No one else would have treasured Association's Diary and Calendar year on year
- RKS was a vivid communicator in spite of his hearing impairment; he used accessories like hearing aid, pen, paper and pad for effective communication
- He was famous in media and press circle as "Vadapalani RKS", with his articles featuring regularly in leading daily and weekly magazines
- He always enjoyed watching good films; he was well informed about all 'punch dialogues' and 'controversial songs' through written reviews. His high mastery of both English and Tamil was a boon to the younger generation in our family as he would write Tamil meanings in English paper and vice versa. He has grown in our hearts in leaps and bounds as an embodiment of grace, able leader, role model, pillar of support, a noble human with great sense of humor and attained pinnacle of glory
- His kindness was extended even to dogs and crows who are still looking at our French window for their daily share of biscuits
- Though he has physically departed, his soul remains with all of us and guides us in all our endeavors
- Incidentally, RKS was born on "Annabishegam day" and attained Shiva Loka on "Somavaara Pradosham" as he was an ardent devotee of Lord Shiva.
- Last but not the least, I am puzzled at the name of our apartment "Legend Square" and realize that it's a mark of honor to my dear father who lived as a legend throughout his life

**- K S Harishankar Ram**
**S/o. Er. RKS**

**தமிழ்நாடு பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம் அவர்களின் கடித எண். 37/ கோ.8/ 2016. நாள். 22/09/2016.**

பெறுபவர்

பொதுச்செயலாளர் அவர்கள்
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை அலுவலக வளாகம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

அன்புடையீர் வணக்கம்

நூறாண்டுகள் கடந்தும் உறுப்பினர்களுக்கு தொய்வில்லா தொண்டாற்றி வருகின்ற பொறியியல் சங்கத்தின் சேவைக்கு தமிழ்நாடு பொதுப்பணித்துறை ஊழியர் சங்கத்தின் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும் வணக்கத்தினையும் முதற்கண் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்வடைகின்றோம். பொறியியல் சங்கத்தின் அடியொற்றி தமிழ்நாடு பொதுப்பணித்துறை ஊழியர் சங்கமும் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பையும் பணி முன்னேற்றத்தையும் பெருவாரியான அளவிலே பெற்றுக் கொடுத்து உறுப்பினர்களின் நலனை தொடர்ந்து பேணிகாத்து வருகிறது.

தமிழக பொதுப்பணித்துறையின் பணிகளிலே ஒரு அங்கமாக திகழ்கின்ற முன்னாள் வேலைநிதி ஊழியர் சமுதாயத்திற்குள் அடங்கிய 132 பதவியினங்களில் ஒரு பதவியினம்தான் பணிஆய்வாளர் என்று இன்றைக்கு பெயர்மாற்றம் பெற்றுள்ள மேஸ்திரி என்ற முன்னாள் பதவியினமாகும். இப்பணிஆய்வாளர் பதவிக்கு எங்கள் தமிழ்நாடு பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம் பல்வேறு மேம்பாடுகளை அரசிடமிருந்து பெற்றுக் கொடுத்து இப்பதவியின் நிரந்தர நியமனங்களுக்காக சிறப்பு விதிகளையும் பெற்று பாதுகாத்து வருகிறது.

இந்நிலையில் சமீபகாலமாக தினச்சம்பள அடிப்படையில் பணியாற்றிய ஊழியர்களில் இருந்து பணிவரன்முறை செய்யப்பட்டு பணிஆய்வாளர் பதவி பெற்ற ஊழியர்களில் பட்டயப்படிப்பு முடித்துள்ள ஊழியர்களை "பட்டயப்படிப்பு பெற்றுள்ளார்" என்ற ஒரே காரணத்தை முன்வைத்து பொறியியல் சங்கத்திலும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு மாவட்ட அளவிலே நிர்வாகப்பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் பொதுப்பணித்துறை ஊழியர் சங்கத்திலும் உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள். ஒருவர் இருவேறு சங்கங்களிலே உறுப்பினராக இருப்பதை எந்த சங்க விதிமுறைகளும் அனுமதிக்காது என்பதை நாம் அறிந்துள்ளோம். இதனால் பல்வேறு கேள்விகளுக்கு இடமளிக்க வேண்டிய கட்டாயச் சூழல் இருசங்கங்களின் நிர்வாகிகளுக்கும் கூட்ட நிகழ்வுகளின்போது ஏற்படட வாய்ப்புள்ளது.

எனவே பாரம்பரியமும் தோழமையும் மிக்க நம் இரு சங்கங்களின் உணர்வுகளையும் சங்க விதிமுறைகளையும் பேணிக்காத்திடுகின்ற வகையில் முன்னாள் வேலைநிதி ஊழியர் இனத்தைச் சார்ந்த, இந்நாள் பொறியியல் சார்நிலைப்பணியின் கீழ் நியமனம்

பெறுகின்ற பணிஆய்வாளர் பதவி தொடங்கி நீர்ப்பாசன உதவியாளர் பதவி வரை பட்டயம் படித்துள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை பொறியியல் சங்கத்தில் உறுப்பினர்களாக இணைப்பதை மறுபரிசீலனை செய்து, அவர்கள் எப்போதும் பொதுப்பணித்துறை ஊழியர் சங்க உறுப்பினராக இருந்திட உரிய ஒத்துழைப்பு நல்கி உதவிடுமாறு தங்களிடம் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

நன்றியுடன்
**(இரா. செல்லப்பாண்டியன்)**
தலைவர்
மற்றும் பொதுச்செயலாளர் கூ/பொ
தமிழ்நாடு பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம்
பொ.ப.து. அலுவலக வளாகம்
சேப்பாக்கம், சென்னை - 5.

# பணி நியமனம், பணி வரன்முறைக்கான புதிய விதிமுறைகள் மசோதா தாக்கல்

■ சென்னை

அரசுப் பணி நியமனம், பணி வரன்முறைக்கான புதிய விதிமுறைகள் கொண்ட சட்டமசோதாவை நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேரவையில் நேற்று தாக்கல் செய்தார்.

அதன் விவரம் வருமாறு:

அரசுப் பணிகள் மற்றும் பதவிகளுக்கு பணியமர்த்தப்படும் நபர்களின் நியமனம் மற்றும் பணி வரன்முறை ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன.

தற்போது சட்டமன்றத்தின் சட்டம் ஒன்றினால் அத்தகைய பணிகள் மற்றும் பதவிகளுக்கு பணியமர்த்தப்படும் நபர்களின் நியமனம், பணி வரன்முறையை ஒழுங்குமுறைப்படுத்தும் வகைமுறைகளைச் செய்வது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. அதனுடன் செயல்படும் வகையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதிகளின் பகுதி-1, பகுதி-2 -ன் வகைமுறைகளை உள்ளடக்கும் வகையில் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதென அரசு முடிவு செய்துள்ளது.

மேலும் அரசால் வகுத்துரைக்கப் பட்டுள்ள சுழற்சி முறையிலான தெரிவுக்கிணங்க தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது பிற நியமன முகமைகள் அல்லது பதவியமர்த்தும் அதிகார அமைப்புகளால் தேர்வு செய்யப்பட்ட நபர்களின் பணிமூப்புக்காக வகை செய்யும் பொருட்டு, ஒரு பணியில் பதவியமர்த்தம் செய்யப்பட்டதற்கான நபர்களின் பணிமூப்புக்கென தனியாக சட்டம் கொண்டு வருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிவு அல்லது இனம் அல்லது தட ஒதுக்கீட்டின் விதி மற்றும் சுழற்சிமுறை ஆணைப்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அல்லது பிற நியமன முகமைகள் அல்லது பதவியமர்த்தும் அதிகார அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட பட்டியலில் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வரிசையிடத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்று சட்டமசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இயங்கும் உலகம்

## திருச்சி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சிக்கிளையின் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் 2016-17ஆம் ஆண்டு கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் 23.07.2016 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் திருச்சி, மன்னார்புரம், பொறியாளர் முருகானந்தம் இல்லம், ஹம்ஜா-கேசவராவ்-அடைக்கலதுரை அரங்கத்தில் சிறப்புற நடைபெற்றது.

இந்த பொதுக்குழு கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச்சங்கத்தில் இருந்து, பொறி. த. முருகேசன், மாநில பொதுச்செயலாளர், பொறி. எஸ். பாஸ்கரன், மாநில துணைத்தலைவர், பொறி. ஆர். தயாளக்குமார், கிழக்கு மண்டல செயலாளர்ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கிளைத்துணைத்தலைவர் பொறி.த. பாலமுருகன் அவர்களை தலைமையேற்று நடத்திக்கொடுக்கும்படி கிளையின் செயலாளர் கீ.இரா. ஜெயராமன் அவர்கள் முன்மொழிய, கிளையின் பொருளாளர் பொறி.எஸ்.சி.எஸ். முரளிதரன் அவர்கள் வழிமொழிந்தார்.

இதனையடுத்து, கிளையின் கூட்டத்தலைவர் தமது உரையில் உறுப்பினர்களின் வருகை குறித்தும், கிளையின் செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

பின்னர், செயலாளர் பொறி.கீ.இரா. ஜெயராமன் அவர்கள் தமது உரையில், திருச்சி கிளையில்தான் அதிக உறுப்பினர்கள் உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் இருப்பதாகவும், அவர்களுக்கு மையச் சங்கத்தில் விரைந்து மேல் நடவடிக்கை மேற்கொண்டு ஆவண செய்ய கோரிக்கை விடுத்தார். பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளராகவும், இளநிலை வரைதொழில் அலுவலராகவும் பதவி உயர்வு பெறும் வகையில் உரிய ஆணையினை விரைந்து பெற்றுத்தந்திடவும் வேண்டுகோள்விடுத்தார். கிளைக் கட்டிடத்தின் மராமத்துப் பணிகளுக்காக, உறுப்பினர்கள் தாராளமாக நன்கொடை வழங்கிடவும் கேட்டுக்கொண்டார்.

பிறகு, சிறப்பு அழைப்பாளர்களான பொறி.த.முருகேசன், மாநிலப் பொதுச் செயலாளர் அவர்களுக்கும், பொறி.எஸ்.பாஸ்கரன், மாநில துணைத்தலைவர் அவர்களுக்கும், பொறி.ஆர்.தயாளகுமார், கிழக்கு மண்டல செயலாளர் அவர்களுக்கும் கிளையின் சார்பாக பொன்னாடையும், நினைவுப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பின்னர், தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் பொறி.எஸ்.பாஸ்கரன் தமது உரையில் நமது சங்கம், உறுப்பினர்களின் நலனுக்காக சிறப்பான முறையில் செயல்பட்டுவருகிறது என்றும் மாநில பொதுச்செயலாளர் பொறி.த.முருகேசன் அவர்களது கரத்தினை வலுப்படுத்தி நமது சங்கத்தின் பல்வேறு கோரிக்கைகளை வென்றிட நாம் உணர்வுடனும், உறுதியுடனும் செயல்படவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

பொறி.ஆர்.தயாளகுமார், கிழக்கு மண்டல செயலாளர் தமது உரையில் கடந்த பிப்ரவரி 2016ஆம் மாதம் புதுக்கோட்டையில் அனைவரும் பாராட்டும் படியாக நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கியதற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார். உறுப்பினர் வருகை குறித்தும், கிளைக்கட்டிட நன்கொடை,

சென்னையில் உள்ள தமிழ்நாடு பொறியியல் சங்க இல்ல கட்டிட மராமத்துப் பணிகளுக்கான நன்கொடை, 2015 வழக்கு நிதி, 2016 வழக்கு நிதி ஆகியவற்றை நிலுவையில்லாமல் செலுத்திட உறுப்பினர்களுக்கும், கிளை பொறுப்பாளர்களுக்கும் வேண்டுகோள் விடுத்து பேசினார்.

இதனையடுத்து, தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பொறி.த.முருகேசன் அவர்கள் தமது சிறப்புரையில்.

1. உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு.
2. அரசாணை எண்.66ன் உச்சநீதி மன்றத்தில் சங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.
3. அரசாணை எண்.1க்கான விதித்திருத்தம்.
4. உதவிப் பொறியாளர்களாக பெயர் மாற்றம் பெற்றவர்களுக்கு முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட செயல்முறை ஆணையில் இழைக்கப்பட்ட குழப்பங்கள்.
5. பணி ஆய்வாளர்கள் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளர்களாகவும், இளநிலை வரைதொழில் அலுவலர்களாகவும் பதவி உயர்வு ஆணை பெறல்.
6. இளம் பொறியாளர்கள் பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்களின் பணிவரன்முறை (Regularisation) மற்றும் தகுதிகாண் பருவம் (Probation period) பெறும் ஆணை.
7. 5th Vacancy சம்பந்தமாகவும், ஓவர்சீயர் பதவியிடம் சம்பந்தமாகவும் மிகவும் விரிவாகவும், உறுப்பினர்கள் புரிந்துகொள்ளும் வகையிலும் எடுத்துரைத்தார்.

பின்னர் உறுப்பினர்கள் கருத்துப்பகுதியில், பொறியாளர் த.செல்லன், வி.வேதரத்தினம், எஸ்.கந்தசாமி மற்றும் G.S. ஐயப்பன் ஆகியோரின் கருத்துரைகளுக்கு மாநில பொதுச் செயலாளர் விரிவாக பதிலுரைத்தார்.

அதன்பின்னர் கிளையின் உறுப்பினர்களான பொறி. எஸ்.சண்முகவடிவு, உதவி செயற் பொறியாளர், பொறி. பா.நாகராஜ், உதவி செயற் பொறியாளர் ஆகியோர் பணியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. பொறியாளர்கள் த.முருகேசன், ஆர்.தயாளகுமார், எஸ்.கந்தசாமி மற்றும் செல்வராஜ் ஆகியோர் வாழ்த்தி பேசினர். திறம்பட செயல்பட்டு வயது முதிர்வு காரணமாக பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பொறியாளர்கள் கிளையின் சார்பாக பொன்னாடையும், நினைவுப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து, திருச்சி கிளைக்கு 2016-17ஆம் ஆண்டுக்கான புதிய கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் அதிகாரிகளாக மாநில பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்களும், மாநில துணைத்தலைவர் எஸ்.பாஸ்கரன் அவர்களும் தலைமையேற்று தேர்தல் நடத்தியதில் கீழ்காணும் பொறுப்பாளர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி.ஆர்.தயாளகுமார். |
| துணைத்தலைவர் | : | பொறி.த.பாலமுருகன். |
| செயலாளர் | : | பொறி.கி.இரா.ஜெயராமன். |
| இணைச்செயலாளர்- 1 | : | பொறி.வி.வேதரத்தினம். |
| இணைச்செயலாளர்- 2 | : | பொறி.எஸ்.தங்கையன். |
| பொருளாளர் | : | பொறி.எஸ்.சி.எஸ்.முரளிதரன். |

புதிய பொறுப்பாளர்கள், மாநில பொதுச்செயலாளர் பொறி.த.முருகேசன் அவர்கள் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

பின்னர், கிளையின் பொதுக்குழு கூட்டம் கிளையின் புதிய தலைவர் பொறி.ஆர்.தயாளகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு ஆணையினை விரைந்து பெற்றுத்தந்திட திருச்சி கிளை மையச்சங்கத்தினை கேட்டுக்கொள்கிறது.
2. உதவிப் பொறியாளர் பெயர் மாற்றம் பெற்ற பொறியாளர்களுக்கு பணப்பயன், Date of publication of Results-லிருந்து கிடைத்திடும் வகையில் ஆணை பெற்றுத்தர ஆவண செய்ய கிளை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
3. பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளராகவும், இளநிலை வரைதொழில் அலுவலராகவும் பதவி உயர்வு ஆணை பெற்றுத்தர கிளை வலியுறுத்துகிறது.
4. உதவிப் பொறியாளர் பெயர் மாற்றம் பெற்றவர்களுக்கு பணி வரன்முறை செய்வதற்கு உரிய ஆணை பெற்றுத்தந்திட கிளை வலியுறுத்துகிறது.
5. தமிழ்நாடு பொறியியல் சங்க மையப் பொறுப்பாளர்களாக உள்ளவர்களுக்கு வாக்குரிமையளிக்க வேண்டாமெனவும், மையச்சங்கப் பொறுப்பாளர்கள் தேர்வு பெற்ற கிளை பொறுப்பாளர்கள் மூலம் தேர்வு செய்யப்படவேண்டுமெனவும், தற்போது மையச் சங்கப் பொறுப்பாளர்கள் ஏதாவது ஒரு கிளையில் புதிய பொறுப்பாளராக தேர்ந்தெடுக்கும்போது ஒருவருக்கு, ஒரு வாக்குரிமைதான் அளிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
6. சிவில் டிப்ளமா படித்தவர்கள் துறையில் ஓவர்சியர் / தொழில்நுட்ப உதவியாளராகவாவது வேலை வாய்ப்புத்துறை மூலமாக துறைக்கு வருவதற்கு ஏற்கனவே இருந்த Overseer / Technical Assistant பதவிகளில் நிரப்ப ஏற்பாடு செய்தல் நலமாக இருக்குமென கிளை கேட்டுக்கொள்கிறது.

பின்னர், பொறியாளர் த.பாலமுருகன், இணைச்செயலாளர் நன்றி நவில சிறப்பு சிற்றுண்டிக்கு பிறகு கிளைப் பொதுக்குழுக்கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**திண்டுக்கல் கிளை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல் கிளை, பொதுக்குழு கூட்டம், 30.07.2016ம் தேதி காலை 11.00 மணியளவில் பொ.ப.து நீ.ஆ.து ஆய்வு மாளிகை வளாகம், கொடைக்கானலில் நடைபெற்றது.

கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கிளையின் தலைவர் பொறியாளர் M. பாக்கியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் பொறியாளர் த. முருகேசன், மாநில துணைத்தலைவர் பொறியாளர் S. பாஸ்கரன், மற்றும் மாநில நிதிச்செயலர் பொறியாளர் K. கமால்தீன், வெளியீட்டுச் செயலாளர் S.K.கருப்புச்சாமி மற்றும் மைய மண்டலச் செயலாளர் பொறியாளர் C.P. மோகன்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கிளைத் தலைவர் வரவேற்றார். வரவேற்புரைக்குப்பின் கிளைச்செயலாளர் பொறியாளர் கே.கே. ஆறுமுகம் அவர்கள் கிளைச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து மைய மண்டலச் செயலாளர், வெளியீட்டுச் செயலாளர், நிதிச் செயலாளர், மற்றும் மாநில துணைத்தலைவர் ஆகியோர் மையச்சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். அதனை தொடர்ந்து பணி ஓய்வு பெற்ற உதவிசெயற்பொறியாளர் பொறியாளர் அருணாச்சலம் அவர்களுக்கு பொதுச்செயலாளர் அவர்களால் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

மாநில பொதுச் செயலாளர் அவர்கள் தமது உரையில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல், பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் இளநிலை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வு குறித்தும் மற்றும் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு விரிவான பதில் உரை அளித்தார்.

மேலும் திண்டுக்கல் கிளையின் 2016-2017-ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்று கீழ்கண்ட கிளைச் சங்க பொறுப்பாளர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு பொதுச் செயலாளர் அவர்கள் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| கிளைத்தலைவர் | - | பொறியாளர் எம். பாக்கியசாமி |
| துணைத்தலைவர் | - | பொறியாளர் எஸ். சரவணக்குமார் |
| செயலாளர் | - | பொறியாளர் கே.கே. ஆறுமுகம் |
| இணைச்செயலாளர் 1 | - | பொறியாளர் க. கண்ணன் |
| இணைச்செயலாளர் 2 | - | பொறியாளர் எம். செந்தில் |
| பொருளாளர் | - | பொறியாளர் கே. விஜயமூர்த்தி |

**கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டன.**

1. பணி ஆய்வாளர்களின் பதவி உயர்வில் தொழில்நுட்ப உதவியாளர், இளநிலை வரைதொழில் அலுவலர் பதவிக்கு முன்னுரிமை கொடுத்து பெற்றுத்தர மையச் சங்கத்தை இப்பொதுக் குழு வலியுறுத்துகிறது.
2. இளநிலை பொறியாளர், உதவிப்பொறியாளர் முதுநிலைப் பட்டியல், அதனை தொடர்ந்து பதவி உயர்வு இடர்பாடுகளை நீக்கி 2016-ம் ஆண்டுக்குள் பெற்றுத்தர கேட்டுக்கொள்கிறது.
3. நமது பொறியியல் சங்க வரலாற்றில் 100 ஆண்டுகளில் ஆபத்தான படிவுப் பாறைகளாக கரையாமல் இருந்த கோப்புகளை கரைத்து நமது பொறியியல் சங்க நலன் கருதி அடிமேல் அடி வைத்து நகர்த்தி முடித்துக்கொண்டுள்ள நமது பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்களுக்கு நமது பொறியியல் சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமாறு கிளைச் சங்கம் மூலம் வலியுறுத்துகிறோம்.
4. இக்கிளை உறுப்பினர் பொறியாளர் ஏ. பாலு, உதவிப்பொறியாளர் மற்றும் பொறியாளர் க. கண்ணன், இளம்பொறியாளர் ஆகிய இருவரின் பணிவரன் முறை சம்மந்தமான குறைகளை சரிசெய்யும் கோப்பினை மையச்சங்கம் தலையிட்டு அரசிடம் இருந்து ஆணைகள் பெற்றுத்தர இக்கிளைச்சங்கம் வலியுறுத்துகிறது.
5. பொதுப்பணித்துறையில் தொழில்நுட்ப உதவியாளர்களை புதிதாக பணியமர்த்தும் கோப்பினை அரசிடமிருந்து விரைவில் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் மையச்சங்கத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

## கன்னியாகுமரி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளையின் பொதுக்குழு கூட்டம் 29.07.2016 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் சங்க கட்டிடத்தில் பொறி M.A. கோல்டுவின் இம்மானுவேல் அரங்கில் நடைபெற்றது.

கிளை தலைவர் பொறி P. சசிகுமார் அவர்கள் தலைமை தாங்கி கூட்டத்தை நடத்தி வைத்தார். பொறி S. ஜெயக்குமார் கிளை பொருளாளர் அவர்கள் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக தென் மண்டல செயலாளர் பொறி H.ஜாகிர் உசேன் அவர்கள் கலந்து கொண்டார்கள். பொறி R. செல்லத்துரை அவர்கள் தென்மண்டல செயலாளர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். கிளை செயலாளர் பொறி. M. தாணுமூர்த்தி அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைத்தார். உறுப்பினர்கள் பொறி. A. மோகன்தாஸ் ,பொறி. A. பிரேமலதா (இணைச்செயலாளர்), பொறி S. பிரபா, பொறி M. சுமதி ஆகியோர்கள் கருத்துக்களை தெரிவித்தனர். தென்மண்டல செயலாளர் அவர்கள் மையச்சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். தொடர்ந்து கன்னியாகுமரி கிளையின் 2016-17ஆம் ஆண்டிற்கான கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் தென்மண்டல செயலாளர் முன்னிலையில் நடைபெற்றது. அதில் கீழக்கண்ட பொறியாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி P. சசிகுமார் |
| உப தலைவர் | - | பொறி A. மோகனதாஸ் |
| செயலாளர் | - | பொறி M. தாணுமூர்த்தி |
| இணைசெயலாளர்1 | - | பொறி N. சதாசிவன் |
| இணைசெயலாளர்2 | - | பொறி A. பிரேமலதா |
| பொருளாளர் | - | பொறி S. ஜெயக்குமார் |

கூட்டத்தின் முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டு கூட்டம் இனிதே முடிவுற்றது.

1. அரசானை எண். 334/ PW(W2) Department - dated 19.10.2007 அன்று தினக்கூலியிருந்து பணிநிரந்தரம் செய்யப்பட்ட பணி ஆய்வாளர்களுக்கு 10 ஆண்டுகள் பணி முடித்த தேதியிலிருந்து ஊதிய நிர்ணயம் மற்றும் முதுநிலை பெற்று தர மையச் சங்கத்தை வலியுறுத்தல்.
2. பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் வரைவாளர் பதவி உயர்வு உரிய காலத்தில் பெற்று தராததற்கு கிளை தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிக்கிறது. துரித நடவடிக்கை எடுத்து விரைவில் பதவி உயர்வு பெற்றுத்தர கேட்டுக்கொள்கிறது.
3. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வில் நமது உறுப்பினர்களின் நலன்கள் பாதிக்கப்படாதவாறு பட்டியல் தயாரிக்க நடவடிக்கை எடுக்க இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

4. பகுதி நேர பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முன் தேதியிட்டு உதவி பொறியாளராக பணிவரன் முறை செய்யாத துறை தலைமைக்கு இக்கூட்டம் கண்டணம் தெரிவிக்கிறது.
5. இளம் பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் பதவியில் பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணி அமர்த்தப்பட்ட பொறியாளர்களுக்கு மிக நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பணி இடைக்காலம் பிழை பொறுத்தல் கோப்பு மீது நடவடிக்கை எடுத்து உரிய ஆணை பெற்றுத் தரும்படி கேட்டுகொள்ளப்படுகிறது.
6. தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளரை நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முடிவில் இணைச்செயலாளர் N.சதாசிவன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

## திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் பொதுக்குழுக் கூட்டம், 2016-17ஆம் ஆண்டிற்கான கிளைச்சங்க தேர்தல் மற்றும் ஓய்வுபெற்ற பொறியாளர்களுக்கு பாராட்டு விழாவும் 4.8.2016, வியாழக்கிழமை மாலை 6.00மணியளவில் பொறி.K.ஆதிமூலம், செயலாளர் அவர்கள் தலைமையில் கிளைச்சங்க கட்டிடத்தில் பொறி S. ரத்தினசாமி அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக தென்மண்டல செயலாளர் பொறியாளர்.H.ஜாகீர் உசேன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இறைவணக்கத்திற்கு பின் உறுப்பினர்கள் அறிமுகம் செய்துகொண்டனர்.

கிளையின்செயலாளர் பொறியாளர் K.ஆதிமூலம், அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி விளக்கி கூறினார்கள். கிளையின் பொருளாளர் பொறி.V.இராமகிருஷ்ணன் அவர்களால் வரவு செலவு அறிக்கை பொதுக்குழுவில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்பட்டது.

ஓய்வுபெற்ற பொறியாளர் T.R. இராஜன், உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு கிளைச்சங்கம் சார்பில் பாராட்டுவிழா நடைபெற்றது. அவரை பாராட்டி உறுப்பினர்கள் உரையாற்றினார்கள்.

கிளைச்சங்கத்தின் சார்பாக மூத்த பொறியாளர் D.வீரராஜ் அவர்களால் பொன்னாடை அணிவிக்கப்பட்டது. பாராட்டு ஏற்புரைக்கு பின்னர் பொறி.T.R.ராஜன், உதவி செயற்பொறியாளர்(ஓய்வு) அவர்கள் சங்க மலரும் நினைவுகள் பற்றி உரையாற்றினார்கள். மேலும் மையச்சங்கத்திற்கு ரூ.2500/- மற்றும் கிளைச்சங்கத்திற்கு ரூ.2500/- நன்கொடை வழங்கினார்கள்.

மேலும், கூட்டத்தில் மூத்த பொறியாளர் D.வீரராஜ், மற்றும் உறுப்பினர்கள் பொறியாளர்.S.வேலானந்தராஜ், M.S. முகமதுராபி, M.B. தங்கஜெய்லானி, M.A.ஜவகருதின் மற்றும் திரு.S.ஜெகநாதன் ஆகியோர்கள் விவாதத்தில் பங்கேற்றனர்.

தெற்கு மண்டல செயலாளர் பொறி.H.ஜாகீர்உசேன் அவர்கள் மையச்சங்கத்தின் தற்போதைய செயல்பாடுகள் பற்றி உரையாற்றினார்கள். மற்றும் உறுப்பினர்களின் பல்வேறு வினாக்களுக்கு பதிலுரை அளித்தார்கள்.

பின்னர் 2016-17ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. S. வேலானந்தராஜ் |
| உபதலைவர் | : | பொறி. P. இராமகிருஷ்ணன் |
| செயலாளர் | : | பொறி. K. ஆதிமூலம் |
| இணைச்செயலாளர் I | : | பொறி. S. ஜெகநாதன் |
| இணைச்செயலாளர் II | : | பொறி. M.S. முகமதுராபி |
| பொருளாளர் | : | பொறி. V. இராமகிருஷ்ணன் |

பின்பு இணைச்செயலாளர் பொறியாளர் M.S.முகமதுராபி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

கூட்டத்தில் கீழக்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. இளநிலைப்பொறியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நேரடியாக தேர்ந்து எடுக்க தடையாக உள்ள விதி திருத்தங்கள் அரசிடம் பெற முயற்சிகள் மேற்கொள்ள மையச்சங்கத்தை கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பணியமர்த்த, உரிய நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை இக்கிளைச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

3. முதன்மை தலைமைப்பொறியாாளர் அலுவலகத்தில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பணிநீக்கம் செய்யப்பட்ட இளம்பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிமுறிவுக்கால பிழைப் பொறுத்தல் (Condonation of Break in Service) கருத்துருவை அரசுக்கு அனுப்பி உடன் ஆணை பெற்றுத்தர இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

4. பட்டயம்பெற்ற பணிஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர்/ இளநிலைவரைவாளர் பதவியை விரைந்து பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

5. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் 2014-15, 2015-16ம் ஆண்டிற்கு காலி பணியிடமதிப்பீடு (Estimate of vacancy) பெற நடவடிக்கை எடுக்குமாறு கிளைச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

6. இளம்பொறியாளர் பதவியில் பொறியியல் பகுதிநேரம் பட்டம்பெற்ற உதவிபொறியாளர் பணி மாற்றம், தேர்வு முடிவு வெளியான நாளிலிருந்து பணிவரன்முறை பெற்றுத் தர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கிளை கேட்டுக் கொள்கிறது.

7. சமீபத்தில் வெளியாகியுள்ள மத்திய அரசு ஊழியர்களுக்கான 7வது ஊதியக்குழுவைத் தொடர்ந்து நமது மாநில அரசு ஊழியர்களுக்காக வெளியாகவுள்ள 8வது ஊதியக்குழுவில் நமது சங்க உறுப்பினர்களான இளநிலைப் பொறியாளர்களுக்கு கடந்த ஊதியக்குழுவால் இழைக்கப்பட்ட அநீதியை களையும் பொருட்டு (உதவிப்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஊதிய வித்தியாசம் சுமார் 10ஆயிரம்) நியாயமான ஊதிய வித்தியாசத்தில் ஊதிய நிர்ணயம் செய்யுமாறு அரசை வலியுறுத்திட, நமது மையச்சங்கத்தில் ஒரு சிறப்புக்குழுவினை ஏற்படுத்தி முழு விழிப்புணர்வுடன் செயல்பட்டு துறையில் பணிபுரிந்து வரும் நமது சங்க இளநிலைப் பொறியாளர்களுக்கான கடைசி ஊதியக்குழுவாக அமைய உள்ள

இவ்வூதியக்குழுவில் உரிய நீதி நிலைநாட்டப்படவும் அதன் மூலம் உறுப்பினர்களது எதிர்காலத்தை நிர்ணயம் செய்ய உள்ள ஒரு சிறந்த ஓய்வூதியமாக அமைந்திடவும் தகுந்த தொடர் நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுத்திட வலியுறுத்தி இக்கிளைச்சங்கத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

8. நடுநிலையான துறை நிர்வாகத்திற்கு பொபது துறைத்தலைமைக்கு IAS அதிகாரியை நியமித்திட நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை இக்கிளை கேட்டுக்கொள்கிறது.

9. அரசாணை எண்.1 பொ.ப.து நாள் 20.1.1990க்கு மிக விரைவாக விதிதிருத்தம் பெற நடவடிக்கைகள் மேற்க்கொள்ள மையச்சங்கத்தை இக்கிளை கேட்டுக்கொள்கிறது.

10. It is resolved to permit the newly elected secretary Thiru K.Adimoolam and Treasurer Thiru V.Ramakrishnan in to operate the SB Account of Tamil Nadu Engineers Association, Tirunelveli branch in Canara Bank, Palayamkottai Branch.

## தேனி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தேனி கிளை சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் மற்றும் கிளைச்சங்க தேர்தல் 15.07.2016 அன்று மாலை 6.30 மணியளவில் பொறி. எஸ். சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பணி நிறைவு பெற்ற பொறியாளர்கள் திரு.பு. சுகுமாரன், உதவிசெயற்பொறியாளர் மற்றும் திரு.வீ.பாலமுருகன், உதவிசெயற்பொறியாளர் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும் தேனி கிளைக்கு 2016-2017 ஆண்டிற்கான கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. எஸ். சந்திரசேகரன் |
| துணைதலைவர் | : | பொறி. எம். விஜிபாபு |
| செயலாளர் | : | பொறி. நா. முத்தையா |
| இணைசெயலாளர் 1 | : | பொறி. ச. மயில்வாகனன் |
| இணைசெயலாளர் 2 | : | பொறி. செ. செல்லக்குமார். |
| பொருளாளர் | : | பொறி. மா. சென்ராம் |

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. இளம்பொறியாளர் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி மாற்றம் பெற்றவர்களுக்கு பொறியியல் பட்டம் பெற்ற தேதியிலிருந்து முதுநிலை நிர்ணயம் செய்து உரிய பணப்பலன்களையும் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை மேற்க்கொள்ளுமாறு மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.
2. பட்டய படிப்பு முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்/ வரைவாளர் பதவி உயர்வு பெற்றுத்தர கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியில் சேர்ந்த இளம்பொறியாளர்(Retrenched JEs) பணிமுறிவு காலத்தினை பணிகாலமாக சேர்க்க உரிய ஆணை விரைவில் பெற்றுத்தர கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் 2000-ஆம் ஆண்டு உதவிப்பொறியாளர்களுக்கு பிறகு அரசு ஆணை எண் (G.O.M.S.No) 1ல் உள்ள உதவிப்பொறியாளர்களுக்கு பதவி உயர்வு பெற்றுத்தருமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.
5. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளம்பொறியாளர் பதவி தேர்ந்தெடுப்பதற்கு முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
6. பிரிவுக்கு ஒருதொழில்நுட்ப உதவியாளர் பதவி பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
7. துறைத் தலைமைக்கு I.A.S அதிகாரியை நியமிப்பதற்கு முயற்சி எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் கிளைச்சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் உரையாடலுக்குப்பின்னர் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**காஞ்சிபுரம் கிளை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், காஞ்சிபுரம் கிளையின் பொதுக்குழு 16.07.2016 அன்று காலை 11.00 மணியளவில் காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கிளைத்தலைவர் பொறி. L. பிலோமின்ராஜ் அவர்கள் தலைமையில் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கியது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்கு பின்னர் கிளையின் தலைவர் பொறி.L. பிலோமின்ராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். பின்பு 23-03-2016 அன்று பொறி A. துளசிராமன், இளநிலைப் பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி. A.சரோஜா அவர்களின் மறைவிற்கு மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது. பின்பு கிளையின் செயல்பாடுகள் குறித்து பொறி. R.S.சுந்தரம் அவர்கள் விரிவாக எடுத்துரைத்து மையச்சங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் உரையாற்றினார். கிளையின் பொருளாளர் பொறி N.ரமேஷ் அவர்கள் வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்து உறுப்பினர்களின் ஒப்புதலை பெற்றார். மேலும் மையச்சங்கப் பொறுப்பாளர்கள் பொறி K.கமால்தீன், பொறி N. புண்ணியகோட்டி மற்றும் வடக்கு மண்டல செயலாளர் பொறி B. நாகலிங்கம் ஆகியோர் மையச்சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள்.

பின்பு 2016-17ம் ஆண்டிற்கான கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது. கீழ்க்கண்ட பொறியாளர்கள் பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

| | |
|---|---|
| தலைவர் | : பொறியாளர் சு. பழநி |
| துணைத்தலைவர் | : பொறியாளர் ரா. மனோகரன் |
| செயலர் | : பொறியாளர் ஆர்.எஸ். சுந்தரம் |
| இணைசெயலர்-1 | : பொறியாளர் வெ. சொர்ணம் |
| இணைசெயலர்-2 | : பொறியாளர் ஆ. வேதகிரி |
| பொருளாளர் | : பொறியாளர் ஜி. ரவிச்சந்திரன் |

பின்பு கிளைச் சங்க செயலாளர் பொறி R.S.சுந்தரம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. சென்ற ஜூன் 2016-ல் 22 நபர்களுக்கு இளநிலைப் பொறியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளராக பதவிப்பெயர் மாற்றம் வழங்கப்பட்டதை பட்டப்படிப்பு முடித்த

கடைசி தேதியில் முன் தேதியிட்டு பதவிப்பெயர் மாற்றம் பெற்று தந்திட வலியுறுத்தி மையச்சங்கத்தை கேட்டுகொள்கிறது.

2. 01-04-2003 க்கு பிறகு பணி நிரந்தரம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு CPS திட்டத்தின் மூலம் பிடித்தம்செய்யப்பட்டு வருகிறது. அதனை மாற்றி பொது சேமநல நிதி (GPF) திட்டத்தினை பெற்று தரவேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. பட்டயப் படிப்பு முடித்த பணி ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப உதவியாளர் பதவியினை இரத்து செய்து வெளியிடப்பட்ட ஆணையினை இரத்து செய்து மீண்டும் தொழில் நுட்ப உதவியாளர் பதவியினை பெற்றுத்தர ஆவண செய்ய வேண்டி இப்பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

4. பட்டயப் படிப்பு முடித்து பணி ஆய்வாளர்களாக பணிபுரிபவர்களுக்கு சொந்த விருப்பத்தின் அடிப்படையில் இளநிலை வரை தொழில் அலுவலர் (JDO) பதவிக்கு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு உரிய ஆணையினை பெற்று தரவேண்டி மையச் சங்கத்தினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

---

### விருதுநகர் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், விருதுநகர் கிளையின் பொதுக்குழு கூட்டம் 28.7.2016 அன்று மாலை 6.00 மணியளவில் விருதுநகர் பொதுப்பணித்துறை வளாகம் கிளைச்சங்கக் கட்டிடமான அப்பாஸ் மந்திரி அரங்கில் நடைபெற்றது.

கிளை பொதுக்குழு கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி கிளையின் தலைவர் பொறியாளர் அ. ராமசுப்பு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் மற்றும் தெற்கு மண்டல செயலாளர் பொறி. H. ஹாகீர் உசேன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கிளையின் செயலாளர் பொறியாளர். சு.ராமரத்தினம் வரவேற்று பேசினார். பின்னர் கிளைத்தலைவர் கிளைச்சங்க நடவடிக்கை மற்றும் உறுப்பினர் வருகை குறித்தும் பேசினார்.

தொடர்ந்து தெற்கு மண்டல செயலாளர் பொறி. H. ஹாகீர் உசேன் அவர்கள் மையச்சங்க நடவடிக்கை குறித்து எடுத்துரைத்தார். பின்னர் கிளையின் பொருளாளர் பொறி.சு. சுப்ரமணியன் அவர்கள் வரவு செலவு கணக்குகள் குறித்து எடுத்துரைத்து உறுப்பினர்களின் அங்கீகாரம் பெற்றார். பின்னர் மாநில தலைவர் அவர்கள் மையச்சங்க நடவடிக்கை குறித்து விரிவாக எடுத்துரைத்து உறுப்பினர்களின் கேள்விகளுக்கும் விரிவான உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து விருதுநகர் கிளையின் 2016-17ம் ஆண்டிற்கான கிளைபொறுப்பாளர்கள் தேர்தல் மாநில தலைவர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கீழ்க்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | : பொறியாளர் அ. ராமசுப்பு |
| உப தலைவர் | : பொறியாளர் ஆர்.வி. ரவிச்சந்திரன் |
| செயலாளர் | : பொறியாளர் கி. கோபாலகிருஷ்ணன் |
| கிளைச்செயலாளர்-1 | : பொறியாளர் ஆர். சரவணமுருகன் |
| கிளைச்செயலாளர்-2 | : பொறியாளர் எம். ரவி |
| பொருளாளர் | : பொறியாளர் சு. சுப்ரமணியன் |

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிதே முடிவுற்றது.

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வானையம் மூலம் இளம்பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. உதவிப்பொறியாளர்களுக்கு தவறாக வழங்கப்பட்ட பணிவரன்முறை ஆணையை ரத்து செய்து உதவி பொறியாளராக பணியேற்ற நாளிலிருந்து பணிவரன் ஆணை பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வை விரைந்து பெற்றுத்தர கேட்டுகொள்ளப்படுகிறது.
4. பணி நீக்கம் செய்யப்பட்ட இளநிலை பொறியாளர்களின் நீண்ட கால நிலுவையில் உள்ள பணி இடைக்கால பிழை பொருத்தல் கோப்பு மீது விரைந்து நடவடிக்கை எடுத்து ஆணை பெற்றுத்தர கேட்டுகொள்ளப்படுகிறது.
5. மையச்சங்க கட்டிட பராமரிப்பிற்கு கிளையின் அனைத்து உறுப்பினர்களும் ஆயிரம் வீதம் நன்கொடை வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**புதுக்கோட்டை கிளை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், புதுக்கோட்டை கிளையின் பொதுக்குழு கூட்டம் 06.08.2016 அன்று சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் புதுக்கோட்டை பொதுப்பணித்துறை வளாகத்திலுள்ள கிளைச்சங்க கட்டிடத்தில் கிளையின் உறுப்பினர் பொறியாளர் S. சித்தார்த்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்று கிளையின் உறுப்பினர் பொறியாளர் ஜெ.ஜோசப் அமிர்தராஜன் அவர்கள் வரவேற்புரையாற்ற கூட்டம் துவங்கியது.

கிளையின் உப தலைவர் பொறியாளர் டி. வீரய்யன் அவர்களின் தாயார் திருமதி டி.அஞ்சம்மாள் அவர்களின் மறைவிற்கும், கிளையின் இணைச்செயலாளர் பொறியாளர் என். பாஸ்கர் அவர்களின் தாயார் திருமதி என். மாணிக்கவள்ளி அவர்களின் மறைவிற்கும் கூட்டத்தில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. கிளைச்சங்க நடவடிக்கைகளை கிளைச்செயலாளர் பொறியாளர் ஜி. அண்ணாமலை அவர்கள் விரிவாக எடுத்துரைத்தும் புதுக்கோட்டை கிளை சிறிய கிளையாக இருந்தாலும் கூட பொதுக்குழு கூட்டத்திற்கு அதிக அளவில் உறுப்பினர்கள் வருகை புரிந்ததற்கு பாராட்டு தெரிவித்தும் பேசினார். கிளையின் வரவு-செலவு அறிக்கையானது கிளையின் பொருளாளர் பொறியாளர் கா. வெள்ளிமலை அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுஅவையின் ஒப்புதல் பெறப்பட்டது.

மையச்சங்கத்தின் சார்பில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்களும், கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர். தயாளகுமார் அவர்களும் சங்க நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தனர். பொறியாளர்கள் எஸ். அரசகுமாரன், ஆர்.வீரமுத்து, ஆர். ரவிச்சந்திரன், கே. சின்னசாமி ஆகியோர் கேட்ட சந்தேகங்களுக்கு மையச்சங்க பொறுப்பாளர்கள் விளக்கமளித்தனர்.

அதன் பிறகு 2016-2017ம் ஆண்டிற்கான கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது. கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறியாளர் ஆர். வீரமுத்து |
| துணைத்தலைவர் | : | பொறியாளர் டி. வீரய்யன் |
| செயலாளர் | : | பொறியாளர் ஜி. அண்ணாமலை |
| இணைசெயலாளர்-1 | : | பொறியாளர் ஜெ. ஜோசப் அமிர்தராஜன் |
| இணைசெயலாளர்-2 | : | பொறியாளர் ஆர். ரமேஷ்குமார் |
| பொருளாளர் | : | பொறியாளர் கா. வெள்ளிமலை |

கிளையின்துணைத் தலைவர் பொறியாளர் டி. வீரய்யன் அவர்கள் நன்றி நவில தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## சிவகங்கை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சிவகங்கை கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 23.07.2016 அன்று காலை 10.35 மணியளவில் கிளைத் தலைவர் பொறி வி. பரமசிவம் அவர்கள் தலைமையில் காரைக்குடி பொதுப்பணித்துறை வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக மையச்சங்க தலைவர் எம். பஞ்சவர்ணம் மற்றும் மையமண்டல செயலர் சி.பி. மோகன்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொறி. சி. கண்ணன் இணைச்செயலர் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் மற்றும் உப தலைவர் உரைக்குப் பின் கிளைச்செயலாளர் பொறி.சி. இராஜ் அவர்கள்உரையாற்றினார். மேலும் மையச்சங்கப் பொறுப்பாளர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி எடுத்து கூறினார்கள். பொருளாளர் பொறி.எஸ். குமார் அவர்கள் கிளை சங்க வரவு செலவுகளை எடுத்துரைத்து அவையில் ஒப்புதல் பெற்றார்.

பின்னர் 2016-2017 ஆம் ஆண்டிற்குரிய சிவகங்கை கிளையின் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறியாளர் ஆர். கல்யாணசுந்தரம் |
| துணைத்தலைவர் | : | பொறியாளர் எ. திருவேங்கடமூர்த்தி |
| செயலர் | : | பொறியாளர் சி. இராஜ் |
| இணைசெயலர்-1 | : | பொறியாளர் சி. கண்ணன் |
| இணைசெயலர்-2 | : | பொறியாளர் எஸ். எட்வின்ஜெயராஜ் |
| பொருளாளர் | : | பொறியாளர் எஸ் குமார். |

பொறி. எஸ். குமார் பொருளாளர் நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 1997 ஆம் ஆண்டில் தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளம்பொறியாளர் பதவி உயர்வு வழங்கும் போது விடுபட்டு பின்னர் 1999 ஆம் ஆண்டு பதவி உயர்வு வழங்கப்பட்ட இளம்பொறியாளர்களுக்கு, உதவிசெயற் பொறியாளர் பதவி உயர்வு பெற்றுத்தர மையச்சங்கத்தை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
2. பொதுப்பணித்துறையில் இயங்கி வரும் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தொழில் நுட்ப உதவியாளர் பணியமர்வு பெறுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொண்டு அப்பணியிடங்களை பெற்றுத்தர இக்கிளை கேட்டுக்கொள்கிறது.

3. பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள உதவி வரைவாளர், இளநிலை வரைதொழில் அலுவலர், வரைதொழில் அலுவலர், பணியிடங்களை நிரப்பிட தேவையான நடவடிக்கைகளை எடுக்க மையச்சங்கத்தை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

## கடலூர் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கடலூர் கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 24.07.2016அன்று காலை 10.30 மணிக்கு கடலூர் பொதுப்பணித்துறை வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கிளையின் உபதலைவர் பொறிஞர் பொன்.மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் பொறிஞர்.த.முருகேசன், மாநில துணைத்தலைவர் பொறிஞர்.எஸ்.பாஸ்கரன் மற்றும் வடக்கு மண்டல செயலாளர் பொறிஞர்.பி.நாகலிங்கம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டனர். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கிளையின் இணைச் செயலாளர் பொறிஞர்.எஸ்.கணேசன், அவர்கள் வரவேற்று பேசினார். கிளையின் உறுப்பினர் பொறிஞர்.க.கண்ணன், உதவி செயற்பொறியாளர், பொ.ப.து.,/நீ.ஆ.து., சிதம்பரம் அவர்களின் மறைவிற்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் கிளை உபதலைவர் உரைக்குப்பின் கிளைச்செயலாளர் பொறிஞர்.நா.பாஸ்கர், அவர்கள் கிளைச்சங்க நடவடிக்கைகள் குறித்து பேசினார். கிளையின் வரவு மற்றும் செலவு அறிக்கையினை கிளையின் பொருளாளர் சார்பில் பொறிஞர்.நா.பாஸ்கர், கிளைச்செயலாளர் அவர்கள் அவைக்கு தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

தொடர்ந்து வடக்கு மண்டல செயலாளர் பொறிஞர்.பி.நாகலிங்கம், அவர்கள் மையச்சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் மாநில துணைத்தலைவர் அவர்கள் தனது உரையில் மத்திய சங்க நடவடிக்கைகள் குறித்தும், கூட்டங்களில் உறுப்பினர்கள் திரளாக தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டிய அவசியம் குறித்தும் பேசினார். மேலும், மைய பொதுக்குழு கூட்டம் நமது மண்டலத்தின் சார்பில் வேலூரில் நடைபெற உள்ளதால் அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும் என்பதனை வலுயுறுத்தி பேசினார். அதனை தொடாந்து உறுப்பினர்கள் பொறிஞர்.பி.அசோகன், பொறிஞர்.G.சிவக்குமார், பொறி.G.குணசேகரன், பொறிஞர்.R. மணிவண்ணன், மற்றும் A. குமார்ஆகியோர்கள் கேட்ட கேள்விகளுக்கு மாநில பொதுச்செயலாளர் அவர்கள் விரிவான பதிலுரை அளித்தார்கள். மேலும், தமது உரையில் உதவிப்பொறியாளர் 72- நபர்களுக்கு பணிவரன்முறை ஆணை பெற்று தந்தது

குறித்தும், இளம்பொறியாளர்/உதவி பொறியாளர் பணிவரன்முறை, பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில் நுட்ப உதவியாளராக பணி உயர் ஆணை வழங்கியது குறித்தும், பணி ஆய்வாளர் பதவியிலிருந்து வரைத்தொழில் அலுவலராக பதவி உயர்வு குறித்தும், உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் குறித்தும் விரிவாக உரையாற்றினார். அதனை தொடர்ந்து மைய சங்க பொறுப்பாளர்கள் மூலம் உதவி செயற்பொறியாளர்கள் பணி ஒய்வு பெற்றதற்காக பொறிஞர்.க.கலியமூர்த்தி, பொறிஞர்.நரசிம்மமூர்த்தி ஆகியோருக்கு நினைவு பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும், பொங்கும் நிதி முதிர்வு தொகைக்குரிய வரைவு காசோலை அளித்தும் சிறப்பு செய்யப்பட்டது.

பின்னர் மையப்பொறுப்பாளர்களால் 2016-17ஆம் ஆண்டிற்கான கிளைப்பொறுப்பாளர் தேர்வு நடைப்பெற்று கீழ்கண்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறிஞர்.பா. அசோகன், |
| உபத்தலைவர் | : | பொறிஞர்.பி. நாகலிங்கம், |
| செயலாளர் | : | பொறிஞர்.நா. பாஸ்கர், |
| இணைச்செயலாளர் 1 | : | பொறிஞர்.எஸ். கணேசன், |
| இணைச்செயலாளர் 1 | : | பொறிஞர்.ஆர். மணிவண்ணன், |
| பொருளாளர் | : | பொறிஞர்.எஸ். குமார், |

நிறைவாக கிளையின் இணைச்செயலாளர் பொறி.R. மணிவண்ணன், அவர்கள் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. உதவி பொறியாளர் / இளம் பொறியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படுவதற்கு முயற்சி எடுத்ததற்கு கடலூர் கிளையின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறது.
2. பட்டயம் பெற்ற பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவியை விரைந்து பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு இக்கிளை கேட்டுக்கொள்கிறது.
3. பட்டயம் பெற்ற பணி ஆய்வாளர்களுக்கு இளநிலை வரை தொழில் அலுவலர் பதவியை விரைந்து பெற்றத்தர இக்கிளை கேட்டுக்கொள்கிறது.
4. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு 2015-16ஆம் ஆண்டிற்கு உரியதை பெற நடவடிக்கை எடுக்குமாறு இக்கிளை கேட்டுக்கொள்கிறது.
5. தேர்வாணையம் மூலம் இளம்பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள இக்கிளை கேட்டுக்கொள்கிறது.

## சென்னை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் பொதுக்குழுக் கூட்டம், 06-08-2016 அன்று காலை 11.00 மணியளவில் சி.ப. சண்முகம் அரங்கில் நடைபெற்றது. கூட்டம் சென்னை கிளையின் தலைவர் பொறி. எஸ். சண்முகானந்தன் தலைமையில், மாநில பொது செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மையசங்க பொறுப்பாளர்கள், கிளை பொறுப்பாளர்கள், மூத்த பொறியாளர்கள் சி.ப. சண்முகம், என். வெங்கட்ராமன், டி.பி. பாலசுப்ரமனியம், கே.கே.வாசுதேவன், எம்.கிருஷ்ணசாமி மற்றும் சென்னை கிளை உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தலைவர் பொறி. எஸ். சண்முகானந்தன் தமது உரையில் பொதுப்பணித்துறையில் டிப்ளமோ பொறியாளர்களுக்கு என உள்ள பதவிகளின் காலி பணியிடங்களை நிரப்புவதற்கு மையச்சங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்கள்.

செயலாளர் பொறி. ஏ.மணிமாறன் கிளையின் நிதிநிலை அறிக்கையினை வாசித்து அவையின் ஒப்புதல் பெற்றார்.

பொதுச்செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்து உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கும் விபரமாக பதிலளித்தார்கள்.

தியாக செம்மல் பொறி. சி.ப.சண்முகம் அவர்கள், உறுப்பினர்கள் எழுச்சியோடு சங்க கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

நமது மூத்த பொறியாளர் டி.பி. பாலசுப்ரமனியம், என்.வெங்கட்ராமன் ஆகிய தேர்தல் அலுவலர் முன்னிலையில் சென்னை கிளையின் 2016-17 ஆண்டிற்கான கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. S. சண்முகானந்தன் |
| உ.ப.தலைவர் | - | பொறி S. நடராஜரத்தினம் |
| செயலாளர் | - | பொறி. A. மணிமாறன் |
| கிளை செயலாளர்-I | - | பொறி. K. ஆதிச்செல்வி |
| கிளை செயலாளர்-II | - | பொறி. S. பார்த்தசாரதி |
| பொருளாளர் | - | பொறி. S. பாண்டியன் |

பொருளாளர் பொறியாளர் S. பாண்டியன் அவர்கள் நன்றி உரை கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. சென்னை கிளையின் வங்கி கணக்கை, புதியதாக தேர்வு செய்யப்பட்ட கிளை செயலாளர் பொறி. மணிமாறன் மற்றும் பொருளாளர். S.பாண்டியன் ஆகியோர் கூட்டாக இயக்க பொதுக்குழு ஒப்புதல் அளிக்கிறது.
2. பொதுப்பணித்துறையில் டிப்ளமோ பொறியாளர்களுக்கு உரிய பதவிகளின் காலி பணியிடங்களை நிரப்ப மையச்சங்கம் நடவடிக்கை எடுக்க பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் !

அவனருளாலே அவன்தாள் வணங்கி, திருச்செந்திலாண்டவன் துணைகொண்டு நிகழும் மங்களகரமான கொல்லம் 1192-ம் ஆண்டு ஸ்ரீ துர்முகி வருடம் ஐப்பசி மாதம் 26-ம் தேதி (11.11.2016) வெள்ளிக்கிழமை சுக்லபட்ச துவாதசி திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று காலை 9.00-க்கு மேல் 10.30-க்குள் தனுசு லக்கினத்தில்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோட்டாறு, தெய்வத்திரு. அ. நடராஜன் - திருமதி ந. விசாலாட்சி அம்மாள் அவர்களின் மகன் வழி பேரனும்:
தெய்வத்திரு. ஆ. முத்துசாமி - திருமதி மு. வேலம்மாள் அவர்களின் மகள் வழி பேரனும்
எங்களின் புதல்வனுமான திருநிறைச்செல்வன்

**அ. விமல்ராஜ், B.Tech.,**

(Senior Inspector, Co-operative Department, Virudhunagar)

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோட்டாறு, தெய்வத்திரு. மா.ஜெனார்த்தனன் (ஓவிய ஆசிரியர் ஓய்வு) - திருமதி ச. கமலம் அவர்களின் மகன் வழி பேத்தியும்:
தெய்வத்திரு. அ. முத்துக்குமார் - தெய்வத்திருமதி மு. அகிலாண்டம் அவர்களின் மகள் வழி பேத்தியும் திரு. ஜெ. மாணிக்கவாசகம் - திருமதி மு. லெட்சுமி அவர்களின் புதல்வியுமான திருநிறைச்செல்வி

**மா.லெ. கமலி, M.Tech.,**

(Ph.D. Scholor-Chonnam National University Medical School, Gwanju, South Korea.)

இவர்கள் திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று, திருக்கயிலாயப் பரம்பரை, "செங்கோல் ஆதீனம்" 103-வது குருமகா சன்னிதானம், **ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள் எழுந்தருளி ஆசிர்வதித்தும், எனது சகோதரர் முனைவர். **அ. அருணாச்சலம் Ph.D.,** (தளாளர், அடைக்கலமாதா கலைக்கல்லூரி, கிறிஸ்துராஜ் கல்லூரி குழுமம், திருச்சி) அவர்கள் முன்னிலையிலும் நாகர்கோவில், இராமவர்மபுரம், **லெஷ்மண் மஹால் திருமண மண்டபத்தில்,** வைத்து நடைபெற உள்ளது. திருமணத்திற்கும் அதனைச் சார்ந்த சகல வைபவங்களுக்கும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பித்து மணமக்களுக்கு ஆசி நல்க அன்புடன் அழைக்கின்றோம்.

**இணைந்து அழைக்கும்:**
**செல்வன் அ. நவின் B.E.,**
**(HCL, Bangalore)**

**தங்கள் அன்புள்ள,**
ந. அருணாச்சலம் B.E., MBA., M.Phil
Asst. Exe.Engineer, (Rtd), PWD Madurai.
மு. அமுதா M.Com., B.Ed.,
Asst. Accounts Officer, TWAD Board, Madurai
1A, 1/187-4, விசாலாட்சி இல்லம், நேதாஜி தெரு,
திருப்பாலை, மதுரை - 14.
செல்: 94433 68301, 94428 23268.

## திருவாரூர்-நாகை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருவாரூர்-நாகை கிளையின் 2016-2017 ஆண்டிற்கான தேர்தல் பொதுக்குழுக் கூட்டம் 30.07.2016 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பொறியாளர் மாரிமுத்து இல்லத்தில் துவங்கி நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிளைத்தலைவர் பொறி. S.சிங்காரவேலு அவர்கள் தலைமையேற்று நடத்தினார். கிளையின் செயலாளர் பொறி. K. சிவக்குமார் அவர்கள் வரவேற்றார். கூட்டத்தில் கிளை உறுப்பினர் மறைந்த பொறியாளர் மனோகரன் அவர்களுக்கு இரங்கல் தெரிவித்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் கிளையின் செயலாளர் பொறி. K. சிவக்குமார் அவர்கள் கிளைச்சங்க செயல்பாடுகள் மற்றும் இல்லம் முதல் தளம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து பேசினார். தொடர்ந்து கிளையின் வரவு, செலவு அறிக்கையை பொருளாளர் பொறி. D. ரமேஷ் அவர்கள் வாசித்து அவையின் ஒப்புதல் பெற்றார். பின்னர் கிழக்கு மண்டல செயலாளர் பொறி. R. தயாளகுமார் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர் மாநிலத்தலைவர் பொறி. M. பஞ்சவர்னம் அவர்கள் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து உரையாற்றி உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். மூத்த உறுப்பினர் பொறி. K. சோமசுந்தரம் உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தமது கருத்துக்களை பதிவு செய்தார். பின்னர் 2016 - 2017 ஆம் ஆண்டிற்கான பொறுப்பாளர்கள் தோந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி S. சிங்காரவேலு |
| உபத்தலைவர் | : | பொறி A.G.A. பாபுராஜ் |
| செயலாளர் | : | பொறி K. சிவக்குமார் |
| இணைச்செயலாளர் 1 | : | பொறி K. ரமேஷ் |
| இணைச்செயலாளர் 2 | : | பொறி V. ஞானசேகர் |
| பொருளாளர் | : | பொறி S. முரளி |

புதிய பொறுப்பாளர்கள் மாநிலத்தலைவர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் கிளைத் துணைத்தலைவர் பொறி. AGA. பாபுராஜ் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. பணி ஆய்வாளரில் இருந்து தொழில்நுட்ப உதவியாளராக பதவி உயர்வு வழங்கப் பெற்று தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஆணையினை உரிய பணி மூப்பு அடிப்படையில் பெற்றுத்தர மையச்சங்கத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது. மேலும் ஏனைய பணி ஆய்வாளர்களுக்கு வரைதொழில் அலுவலர் தரம் - 3 பெற்றுத் தருமாறும் மையச்சங்கத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.
2. பகுதி நேர பட்ட படிப்பு முடித்த இளம்பொறியாளர்களுக்கு உரிய தேதியில் (முன்தேதியிட்டு) உதவிப்பொறியாளராக ஆணை பெற்றுத்தர மையச்சங்கத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.
3. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் மற்ற பதவி உயர்வு பட்டியல்கள் போல் அந்தந்த ஆண்டுக்கு தயார் செய்து பதவி உயர்வு வழங்கிட மையச்சங்கம் உரிய நடவடிக்கை எடுக்க இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திண்டுக்கல் கிளை உறுப்பினர் பொறியாளர் என்.அருணாச்சலம் உதவிச்செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூபாய் இரண்டாயிரத்து முன்னூறு (2300/-) மட்டும் மகன் திருமணத்திற்காக நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் ஈரோடு கிளை முன்னாள் தலைவர் பொறியாளர் பி.இராமசாமி உதவிச்செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூபாய் இரண்டாயிரத்து முன்னுற்றி எழுபத்தைந்து மற்றும் இரண்டாயிரம் சேர்த்து மொத்தமாக (4375/-) மட்டும் ஈரோடு கிளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் சி. மோகன் உதவிப்பொறியாளர் அவர்கள் பதவிப் பெயர் மாற்றத்திற்காக ரூபாய் 2000/- (இரண்டாயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் இராமநாதபுரம் கிளை உறுப்பினர் பொறியாளர் இராமர், இளம்பொறியாளர் அவர்கள் 14.08.2016 அன்று இயற்கை எய்தினார்.

கன்னியாகுமரி கிளை உறுப்பினர் பொறியாளர் F. மைக்கேல் ராஜ், இளநிலைப் பொறியாளர் அவர்களது இளைய சகோதரர் திரு. F. ஜஸ்டின் சேவியர் அவர்கள் 25.09.2016 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

2016 - 2017 ஆம் ஆண்டிற்கான காஞ்சிபுரம் கிளை புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்



2016 - 2017 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை கிளை புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்



2016 - 2017 ஆம் ஆண்டிற்கான திண்டுக்கல் கிளை புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்



தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர்
பொறியாளர் பா.நாகராஜன் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை
பொதுக்குழுக் கூட்டத்தில் மாநில துணைத்தலைவர் நினைவுப்பரிசு வழங்குதல்




2016 - 2017 ஆம் ஆண்டிற்கான திருச்சி கிளை புதிய பொறுப்பாளர்கள்
உறுதிமொழி எடுத்தல்



Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2015-17 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**OCTOBER 2016**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.சண்முகவடிவு உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நினைவுப்பரிசு வழங்குதல்




தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Posted on 05-10-2016**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75312